**தலைப்பு 277 – மொனராகலை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 277 – மொனராகலை மாவட்டச் செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 15 ஆம் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்ககூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

மொனராகலை மாவட்டச் செயலகத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 584.00 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 577.23 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மாவட்டச் செயலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 6.77 மில்லியன் அதாவது 1.16 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுடெழுபவை | 464.00 | 458.73 | 5.27 | 1.14 |
| மூலதனம் | 120.00 | 118.50 | 1.50 | 1.25 |
| மொத்தம் | **584.00** | **577.23** | **6.77** | **1.16** |

#### (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளைப் பயன்படுத்துதல்

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்டச் செயலகத்திற்கு ஏனைய 22 அமைச்சுக்கள் மற்றும் 19 திணைக்களங்களால் ரூபா 1,624 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 1,356 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 268 மில்லியன் அதாவது 16.50 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய 27701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாரளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் என்பன கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 34.00 | 33.78 | 28.00 | 32.61 | 125.00 | 92.16 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள 05 பொது வைப்புக் கணக்குகளின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளினது கூட்டுத்தொகை ரூபா 111.56 மில்லியன் ஆகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0013/0079/000 | 25.63 |
| 6000/0000/00/0016/0027/000 | 83.93 |
| 6000/0000/00/0018/0038/000 | 1.90 |
| 6000/0000/00/0001/0060/000 | 0.01 |
| 6000/0000/00/0017/0000/000 | 0.09 |
| **மொத்தம்** | **111.56** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

மாவட்டச் செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அவ் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 கணக்காயவிற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செவனகல சமுதாய அடிப்படை வங்கியால் 11 கடன் விண்ணப்பதாரர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 3,250,000 கடன்களிற்கான கடன் விண்ணப்பப் பத்திரங்கள், உடன்படிக்கைகள், கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், கடன் ஞாபனக்குறிப்பு போன்ற ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செவனகல கிராமிய அடிப்படை வங்கியால் வழங்கப்பட்ட ரூபா 300,000 பெறுமதியான காசோலைக்குரிய கொடுப்பனவு விபரங்கள், பெறுநரின் பெயர், முகவரி போன்ற தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதிலளித்தல்

மீளாய்வாண்டின் போது மாவட்டச் செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 50 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு 2016 யூன் 27 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்காததுடன் அந்த ஐயவினாக்களுக்குரியதாக கணிப்பிடக்கூடிய கொடுக்கல்வாங்கல்களினது பெறுமதி ரூபா 104,759,526 ஆகவிருந்தது.

## 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.3.1 பாதீட்டு முரண்

மாவட்டச் செயலகத்தினால் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,005,000 நிதியேற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகள்

மாவட்டச் செயலகத்திற்கு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பல்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளைப் பயன்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

**(அ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 நவம்பர் 26 ஆம் திகதிய 1/2016 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கிணங்காமல் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியேற்பாடுகளின் கீழ் மாவட்டச் செயலகம் மற்றும் மொனராகலை பிரதேச செயலகத்தால் பின்வரும் செயற்பாடுகளிற்காக ரூபா 3,004,237 கூட்டுமொத்தத் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | காரணம் | செலவினம் |
|---|---|---|
| | | ரூபா |
| - | ஊவா மாகாண சபைக்கு சொந்தமான 12 பாடசாலைகளிற்கான திருத்தங்கள் | 1,209,644 |
| - | பிபில, மொனராகலை, தனமல்வில, கதிர்காமம் மற்றும் செவனகல பிரதேச செயலகங்களினால் முன்பள்ளி மாணவர்களிற்கு தனியான பாவனைக்கான பொருட்களினை வழங்குதல் | 1,494,593 |
| - | பிபில பிரதேச செயலகத்தால் இளைஞர் யுவதிகளிற்கு ரீசேட் வழங்குவதற்கு | 300,000 |
| | **மொத்தம்** | **3,004,237** |

(ii) 2015 நவம்பர் 26 ஆம் திகதிய 1/2016 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு முரணாக பன்முகப்படுத்தப்பட்ட நிதியேற்பாடுகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,298,604 பெறுமதியான 7,582 அலகு பொருட்கள் கணக்காய்வுத் திகதியான 2017 சனவரி 31 வரையிலும் பயனாளிகளிற்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக நிர்வாகச் செலவினங்களாக மாவட்டச் செயலகத்தால் பெறப்பட்ட நிதியேற்பாடுகளில் அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரித்தற்ற செலவினங்களிற்காக ரூபா 498,380 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(iv) பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் படல்கும்புர பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 716,020 பெறுமதியான 284 அலகு பொருட்களை கணக்காய்வுத் திகதியான 2016 திசெம்பர் 14 ஆம் திகதி வரையிலும் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செவனகல திவிநெகும சமுதாய அடிப்படை வங்கியால் 2016 யூலை 13 இல் இரண்டு பயனாளிகளிற்கு வழங்கப்பட்ட ரூபா 325,000 ஆன கடன் தொகைகளில் கடன் தவணைப்பணமோ அல்லது அவற்றின் மீதான வட்டியோ அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) செவனகல திவிநெகும கிராமிய அடிப்படை வங்கியால் 12 பயனாளிகளிற்கு 2015 ஏப்ரல் 29 தொடக்கம் 2016 யூலை 28 வரையான காலப்பகுதியின் போது வழங்கப்பட்ட ரூபா 3,550,000 கூட்டுமொத்தமான கடன்களில் ரூபா 3,491,537 அதாவது 98.35 சதவீதம் கணக்காய்வுத் திகதியான 2016 திசெம்பர் 27 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

மாவட்டச் செயலகம் மற்றும் 10 பிரதேச செயலகங்களிற்குரிய 02 வருடங்களை விஞ்சிய ரூபா 24,299,429 கூட்டுமொத்தமான ஒப்பந்த வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

27701 ஆம் விடய இலக்கத்தையுடைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம், இடம்மாற்றலாகிச் சென்ற, மரணித்த, ஓய்வுபெற்ற, பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகள் ரூபா 4,500,855 கூட்டுமொத்தமாகும். அந் நிலுவைக் கடன் மீதிகள் 01 தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான வீச்சுக் காலப்பகுதிகளில் காணப்பட்டிருந்த போதிலும் அந் நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு மாவட்டச் செயலகம் தவறியிருந்தது.

### 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.6.1 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133(2)(அ) இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 11 பிரதேச செயலகங்களிற்குரியதாக 17 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் மாவட்டச் செயலகத்திற்குரியதாக எந்தவொரு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.6.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 சனவரி 28 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை மூலம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவால் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய 19 விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு போதியளவில் செயற்படுத்தியிருக்கவில்லை.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---

வெள்ளவாய பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனமொன்று 02½ ஆண்டுகளாக விளைவற்றிருந்தது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

கதிர்காமம், மெதகம மற்றும் வெள்ளவாய பிரதேச செயலகங்கள் தொடர்பான 2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் 10 வகையான பொருட்களிற்குரிய 68 அலகுகளின் பற்றாக்குறை குறிப்பிடப்பட்ட போதிலும் இது தொடர்பில் நிதிப்பிரமாணம் 757 (2) மற்றும் (3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 தீர்ப்பனவு செய்யப்படாத பொறுப்புக்கள்**

---

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தின் தீர்ப்பனவு செய்யப்படாத பொறுப்புக்களின் மீதி ரூபா 364,182 தொகையானதுடன் இவை 01 வருடத்திற்குக் குறைவான காலவீச்சில் காணப்பட்டன.

**3.9 இணங்காமைகள்**

---

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வுசெய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
| --- | --- | --- |
| | ரூபா | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | |
| (i) நிதிப்பிரமாணம் 104(4) | - | விபத்து இடம்பெற்று 01 ஆண்டு தொடக்கம் 16 ஆண்டுகள் வரையான காலவீச்சைக் கடந்திருந்த 06 மோட்டார் வாகன விபத்துக்கள் தொடர்பில் மாவட்டச் செயலகத்தால் முழுமையான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 137 | 530,815 | வெள்ளவாய பிரதேச செயலகத்தால் இரண்டு அங்கீகரிக்கப்படாத உறுதிச்சீட்டுக்களிற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அக் கொடுப்பனவுகளிற்காக வழங்கப்பட்ட இரண்டு காசோலைகள் 06 மாதங்களிற்கு மேலாக கையில் காணப்பட்டதுடன் 2017 யூன் 12 இல் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப்பிரமாணம் 215(3)(ஆ) | 142,000 | மொனராகலை மற்றும் செவனகல பிரதேச செயலகங்களால் 2015 ஆம் ஆண்டின் போது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் ரூபா 142,000 தொகை செலவினமாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. |

**(ஆ) ஒப்பந்தங்களிற்கான வரிக் கொடுப்பனவு**

மாவட்டச் செயலகத்தால் பெறுமதி சேர் வரிக்காக செல்லுபடியாகும் பதிவில்லாத ஒப்பந்ததாரர்களிற்கு 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 2,036,250 பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருந்தது.

## 3.10 உள்ளூர் நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்

உள்ளூர் நிதியங்களின் கீழ் நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

### (அ) பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயன்முன்னேற்றமடைந்திராத செயற்திட்டங்கள்

பினவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மெதகம பிரதேச செயலகத்தின் 2014 ஆம் ஆண்டின் பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய திட்டத்தின் கீழ் 03 குடிநீர் செயற்திட்டங்களின் ஆரம்பக் கட்டத்திற்காக ரூபா 3,679,240 தொகை செலவிடப்பட்டிருந்தது. 1398 பயனாளிகளிற்கு தண்ணீர் வசதி வழங்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டங்களின் இரண்டாம் மற்றும் இறுதிக் கட்டங்கள் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான அலுவலக விடுதிகளின் வேலிகளை அமைப்பதற்காக வேண்டப்பட்ட முட்கம்பிகள், கொங்கிறீட் தூண்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 391,075 தொகை செலவிடப்பட்டிருந்தது. அப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர் தெழில்நுட்ப அலுவலரின் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்காததுடன் கணக்காய்வுத் திகதியான 2017 மார்ச் 20 வரையிலும் ரூபா 191,250 பெறுமதியான 255 கொங்கிறீட் தூண்கள் செயலகத்தால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) செவனகல பிரதேச செயலகத்தால் பன்முகப்படுத்தப்பட்ட நிதியேற்பாடுகளின் கீழ் புஞ்சிவெவ பகுதியிலுள்ள உஸ்வரி நீர் முன்மொழிவுத் திட்டத்திற்காக ரூபா 399,976 பெறுமதியான நீரிறைக்கும் இயந்திரம் மற்றும் தேவையான ஏனைய துணைக்கருவிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கப்படாமல் பணம் விடுவிக்கப்பட்டமை

மாவட்டச் செயலகத்தின் இரண்டு மோட்டார் வாகனங்களைத் திருத்துவதற்காக 2016 திசெம்பர் 31 இல் தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 1,077,500 தொகை

செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2017 மார்ச் 16 வரையிலும் அந்த இரண்டு மோட்டார் வாகனங்களும் திருத்தப்பட்ட பின்னர் மாவட்டச் செயலகத்திற்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. உரிய தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட காசோலை 2017 பெப்ரவரி 27 இல் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டு பணம் பெறப்பட்டிருந்தது.

**3.11 செயலாற்றல்**

2016 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், மாவட்டச் செயலகத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்பட்டிராத பிரதான தொழிற்படுகள்**

மாவட்டச் செயலகத்திலுள்ள பதவியணியினரின் பயிற்சிக்காக 2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 500,000 நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த நிதியேற்பாடுகளில் ரூபா 400,017 தொகை பதவியணியினரின் பயிற்சிக்காக செலவிடப்படாது மாவட்டச் செயலகத்தின் நான்கு உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு சுற்றுலாக்களிற்காக செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை**

தனமல்வில பிரதேச செயலகத்தின் 5 பிரிவுகளால் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 40 நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் 13 நடவடிக்கைகள் இலக்கிடப்பட்ட மட்டத்தை விடக் குறைவாக செயற்படுத்தப்பட்டிருந்தன.

**3.12 சர்ச்சைத் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

மாவட்டச் செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் சர்ச்சைத் தன்மையானவையாகக் காணப்பட்டன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் சிலவற்றின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) மாவட்டச் செயலக வாகனத்திற்கான எரிபொருள் நுகர்வுப் பரிசோதனையை மேற்கொண்ட போது லீற்றரொன்றிற்கு 10.02 கிலோமீற்றர் ஓடக்கூடியதென வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எரிபொருள் லீற்றரொன்றிற்கு 7 கிலோமீற்றர்

ஓடக்கூடியதென எரிபொருளை சமப்படுத்துவதற்கு மோட்டார் வாகன பரிசோதகரால் பரிந்துரை வழங்கப்பட்டதன் காரணமாக 2014 யூன் தொடக்கம் 2016 திசெம்பர் வரையான காலப்பகுதியின் போது 5840 லீற்றர் எரிபொருள் மேலதிகமாக வாகனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) புத்தல பிரதேச செயலகத்தின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான 200 ஹெக்ரெயர்கள் பரப்பளவுள்ள அரசாங்க காடு, வெள்ளவாய பிரதேச செயலகத்தின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 400 ஹெக்ரெயர்கள் பரப்பளவுள்ள இன்னொரு அரசாங்கக் காடு என்பன 2010 ஆம் ஆண்டிலிருந்து தனியார் கம்பனியொன்றால் அத்துமீறி ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. பின்னர் அக் கம்பனியால் வாழை பயிரிடுவதற்காக இன்னொரு கம்பனிக்கு உடன்படிக்கையொன்றின் மூலம் இந்தக் காணியானது வழங்கப்பட்டிருந்தது.

**3.13 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

**அரசாங்க பெறுகை வழிகாட்டல்களிலிருந்து விலகுதல்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைக் குழுவின் மூன்றாம் உறுப்பினர் பெறுகை நிறுவனத்திற்கு வெளியிலுள்ள நபராக இருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக தனமல்வில பிரதேச செயலகத்தினால் அதன் 3 உத்தியோகத்தர்களை கொண்ட பெறுகைக் குழுவால் ரூபா 9,067,855 பெறுமதியான 34 பெறுகைத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 3,428,005 மற்றும் ரூபா 1,402,500 பெறுமதியான பொருட்கள் ரூபா 1 மில்லியன் அதிகார எல்லையை விஞ்சி சந்தைவிலை ஒப்பீட்டு முறையின் கீழ் 2 பெறுகைத் தீர்மானங்கள் மூலம் வெள்ளவாய பிரதேச செயலகத்தால் 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) 2016 மே 01 தொடக்கம் 2017 ஏப்ரல் 30 வரையான காலப்பகுதிக்காக மாவட்டச் செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்களிற்கு பாதுகாப்பு சேவையை வழங்குவதற்கான நிறுவனத்தை தெரிவுசெய்வதற்கான பெறுகைச் செயன்முறையுடன் இணங்காமல் ரூபா 9,541,800 இணங்கப்பட்ட தொகைக்கு அரசாங்க நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. பெறுகை நடைமுறையை பின்பற்றி முன்னைய காலங்களிற்கான பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்கு தனியார் நிறுவனமொன்று தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 6,249,600 தொகைக்கு அவர்களிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. பெறுகை

நடைமுறைக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததால் மீளாய்வுக் காலப்பகுதிக்கான பாதுகாப்பு சேவை ஏற்பாட்டின் மீது ஏற்பட்ட செலவினம் முன்னைய காலங்களை விட ரூபா 2,823,318 ஆல் மிகைத்திருந்தது.

(ஈ) மாவட்டச் செயலகத்தால் மொனராகலை பகல் பராமரிப்பு நிலையத்திற்காக வேண்டப்பட்ட பல்வேறு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 2015 ஆம் ஆண்டில் ரூபா 768,080 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது ரூபா 333,770 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட மற்றும் குறிப்பிடப்பட்ட உபகரண வகைக்கிணங்க வழங்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(உ) 05 மோட்டார் வாகனங்களிற்கு நவீன தொழில்நுட்பத்துடனான மின் சாதனங்களை பொருத்துவதற்கு மாவட்டச் செயலகத்தால் ரூபா 423,079 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2017 மார்ச் 20 வரையிலும் பொருத்தப்பட்ட உபகரணங்கள் செயற்படும் நிலையிலிருக்கவில்லை.

(ஊ) சமயப் பாடசாலைகளிற்கிடையில் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக பிபில பிரதேச செயலகத்தால் ரூபா 399,960 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்ட உபகரணங்களிலிருந்து வேறுபட்டிருந்த உபகரண வகை விநியோகஸ்தரால் வழங்கப்பட்டிருந்தது.

## 3.14 மோசடித் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

-----------------------------------------------------------------------

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையான கொடுக்கல்வாங்கல் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) செவனகல திவிநெகும சமுதாய அடிப்படை வங்கியில் வாழ்வாதார அபிவிருத்தி கடன் திட்டத்தின் கீழ் ரூபா 25,000 கடனிற்குப் பதிலாக ரூபா 300,000 கடன் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டிருந்தது. வங்கியின் இன்னொரு உத்தியோகத்தரால் இதில் ரூபா 275,000 தொகை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 50,000 கடன் கோரியிருந்த விண்ணப்பதாரரின் விண்ணப்பம் செவனகல திவிநெகும சமுதாய அடிப்படை வங்கியால் நிராகரிக்கப்பட்டிருந்தது. பின்னர், அந்த விண்ணப்பதாரரின் பெயரில் ரூபா 250,000 கடன் வழங்கப்பட்டிருந்த

போதிலும் விண்ணப்பதாரரால் கடன் பெறப்பட்டிருந்ததென உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) செவனகல திவிநெகும சமுதாய அடிப்படை வங்கியானது ரட்டவிரு கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன்களை வழங்குவது தொடர்பான அடிப்படைத் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்யாமல் ரூபா 900,000 கடன்கள் 04 பயனாளிகளின் பெயரில் அவர்களுடைய கையொப்பங்களை பெற்று விடுவித்திருந்த போதிலும் உரிய பயனாளிகளால் அக் கடன்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3.15 மேலதிகக் கொடுப்பனவுகள்

------------------------------------------

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட பிரதேச செயலகங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேலதிகக் கொடுப்பனவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) பிபில பிரதேச செயலகத்தால் அமுல்ப்படுத்தப்பட்ட 8 வேலைகளிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது நிறைவேற்றப்படாத வேலைகளிற்காக ரூபா 222,423 மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மொனராகலை பிரதேச செயலகத்தால் அமுல்ப்படுத்தப்பட்ட 39 வேலைகளிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது பொறிக் கலவை விலைவீதம் பயன்படுத்தப்படாமை, செதுக்கிய பலகைகளிற்கான குறித்துரைக்கப்பட்ட விலைவீதம் பயன்படுத்தப்படாமை, ஏபீசீ இற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், மண் வெட்டுவதற்காக பிழையான விலைவீதம் பயன்படுத்தப்பட்டமை, மண் போக்குவரத்துச் செய்வதற்காக குறித்துரைக்கப்பட்ட விலைவீதம் பயன்படுத்தப்படாமை போன்ற செயற்பாடுகளுக்குரித்தாக ரூபா 1,054,354 மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.16 இழப்புகளும் நட்டங்களும்

----------------------------------------

இழப்புக்களும் நட்டங்களும் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான அரச இல்லங்கள் பெறுமதி மதிப்பிடப்பட்ட பின்னர் புதிய பெறுமதி மதிப்பீடு வழங்கப்பட்டிருந்த போதிலும் புதிய பெறுமதி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2010 ஆம் ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வாடகை

அறவிடப்பட்டிருந்தது. இதனால் ரூபா 608,225 இல்ல வாடகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மொனராகலை பிரதேச செயலத்திற்குச் சொந்தமான 04 ஆம் இலக்க நிர்வாக உத்தியோகத்தரின் அரச இல்லங்கள் வேறு 2 நிறுவனங்கள் செயற்படுவதற்கு வழங்கப்பட்டிருந்தன. அந்த இல்லங்களிலிருந்து பெறவேண்டிய ரூபா 362,750 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 சனவரி வரையான காலப்பகுதிக்காக பிபில பிரதேச செயலகத்தின் கணக்காளரின் அரச இல்லத்தில் குடியிருந்த உத்தியோகத்தரிடமிருந்து வாடகையை அறவிடும் போது ரூபா 117,634 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) கதிர்காமம் பிரதேச செயலகத்தால் மாதாந்தம் வருமானச் சான்றிதழ்களை வழங்குவதில் 1.265 சதவீத வருமானம் விதிக்கப்பட வேண்டிய போதிலும் 01 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்ததனால் ரூபா 59,326 தொகை இழக்கப்பட்டிருந்தது.

(உ) 2016 ஆம் ஆண்டில் மொனராகலை பிரதேச செயலகத்தால் அமுல்ப்படுத்தப்பட்ட 3 செயற்திட்டங்களிலிருந்து ரூபா 45,157 தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.17 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

மாவட்டச் செயலகம் தொடர்பாகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த குறைபாடுகள் சம்பந்தமாக மாவட்டச் செயலகத்தால் சீராக்கம் செய்யப்பட்டிராத பந்திகளுடான தொடர்பு கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2006 | 8.7.2 (அ)(i) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.9.1 மற்றும் 3.9.2 ஆம் வழிகாட்டல்களைக் பின்பற்றாமல் தனமல்வில பிரதேச செயலகத்தால் ரூபா 1,950,000 செலவிடப்பட்டு 26 விற்பனைக் கூடங்களை நிர்மாணித்தலில் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தமை. |

| | | |
|---|---|---|
| 2008 | 10.4(உ)(i) | 2006/2007 ஆம் ஆண்டுகளில் கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் போபிட்டிய, தெனகலன்த வெஹெரகல மற்றும் கஹம்பானவில் ஜனசபா அலுவலகங்களை நிர்மாணிக்கையில் ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் தவறுகள். |
| 2010 | 4.1(i) | 2002 ஆம் ஆண்டில் வெல்லவாய பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான கெப் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியமையால் ஏற்பட்ட ரூபா 375,000 இழப்பை அறவிடுதல். |

**3.18 முகாமைத்துவப் பலவீனங்கள்**

மாவட்டச் செயலகத்தின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(i) கதிர்காமம் பிரதேச செயலகத்திற்கச் சொந்தமான 63 ஆம் இலக்கத்தையுடைய பொழுதுபோக்கு இல்லம் 2001 ஆம் ஆண்டிலிருந்து பெறுமதி மதிப்பிடப்படாமல் குடியிருப்பதற்காக 15 ஆண்டுகளை விட அதிகமான காலப்பகுதிக்கு ரூபா 100 மாதாந்த வாடகையில் உத்தியொகத்தரொருவரிற்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) பெரும்பாண்மைப் பதவியின் கடமைகளிற்கு மேலதிகமாக மொனராகலை மாவட்டப் பொது வைத்தியசாலையில் கணக்காளரின் கடமைகளை ஆற்றியிருந்த மதுள்ள பிரதேச செயலக கணக்காளரால் இரண்டு நிறுவனங்களிடமிருந்தும் ஒரே திகதிகளிற்காக ரூபா 22,500 இணைந்த படி பெறப்பட்டிருந்தது.

**3.19 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 40 | 35 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 24 | 07 | 17 |
| (iii) | இரண்டாம் நிலை | 741 | 657 | 84 |
| (iv) | ஆரம்ப நிலை | 110 | 96 | 14 |
| | **மொத்தம்** | **915** | **795** | **120** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கதிர்காமம், மதுள்ள மற்றும் படல்கும்புர பிரதேச செயலகங்களிலுள்ள நாற்பத்துநான்கு உத்தியோகத்தர்கள் 07 ஆண்டுகள் தொடக்கம் 25 ஆண்டுகள் வரையான வீச்சில் நீண்டகாலமாக இடம்மாற்றம் செய்யப்படாது அதே அலுவலகங்களில் சேவையில் உள்ளனர்.

(ஆ) படல்கும்புர பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம உத்தியோகத்தர் பதவி 07 ஆண்டுகளாகவும், தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி 15 ஆண்டுகளாகவும், தகவல் தொடர்பு தொழில்நுட்ப உதவியாளர் பதவி 07 ஆண்டுகளாகவும் வெற்றிடமாக உள்ளன.

(இ) மதுள்ள பிரதேச செயலகத்தில் தகவல் தொடர்பு தொழில்நுட்ப உதவியாளர் பதவி 10 ஆண்டுகளாகவும், நிர்வாக உத்தியோகத்தர் பதவி 09 ஆண்டுகளாகவும், நிர்வாக கிராம உத்தியோகத்தர் பதவி 04 ஆண்டுகளாகவும், உதவிப் பிரதேச செயலாளர் பதவி 02 ஆண்டுகளாகவும் வெற்றிடமாக உள்ளன.